DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.187/2018

Prosecution side witness for P.W.17

| | | | |
|---|---|---|---|
| Name | ... டாக்டர். திரு. பிரவீன் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **28.01.2026**

A3 produced on PTW. A2, A4 are present.

<u>முதல்விசாரணை:–</u>

நான் தற்போது மேற்படிப்பிற்காக விடுப்பில் இருந்து வருகிறேன். இதற்கு முன்பு 2017 ஆம் வருடம் தூத்துக்குடி மருத்துவகல்லூரி மருத்துவமனையில் மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்தபோது, 01.11.2017 அன்று மாலை 5.00 மணிக்கு ரஞ்சித் என்பவர் சங்கர்ராஜா, த/பெ. கார்த்திக்ராஜா சிலுவைப்பட்டி, தாய்நகர் என்பவரை ஒரு ஆணும்,பெண்ணும் அன்றையதினம் மாலை 4.00 மணிக்கு அடித்துவிட்டதாக மயக்கநிலையில் என்னிடம் சிகிச்சைக்கு சேர்த்தார். அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு சுயநினைவு எதுவும் இல்லை. வலிக்கும் எந்தவித உணர்ச்சியும் அவரிடம் இல்லை. ஆனால் இதய துடிப்பு நன்றாக இருந்தது. அவரது மூச்சு காற்றில் மதுவின் வாடை இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு,

காயம் எண். 1 – மூக்கில் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

காயம் எண். 2– பின்மண்டையில் ஒரு வீக்கக்காயம் காணப்பட்டது.

அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். அதற்காக நான் வழங்கிய விபத்து பதிவேடு நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 24** ஆகும். மேற்படி காயங்கள் அவரை ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் மரப்பலகையால் தாக்கும்போது ஏற்பட வாய்ப்புண்டு. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)

காயம்பட்ட நபரை கையால் தாக்கப்பட்டதாகத்தான் விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் ஆய்வாளர் என்னிடம் கத்தி, கம்பு போன்ற ஆயுதங்களை காட்டி விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். 2 வது காயம் ஒரு நபர் சுவரில் மோதும்போதும், கீழே விழுவதாலும் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.